# கோவிட்-19 நோய்க்கான ப்ரீ-எக்ஸ்போஷர் புரோஃபைலாக்சிஸ் என்றால் என்ன?

**மனித செல்களுக்குள் ஒரு வைரஸ் நுழைவது மற்றும் ஒட்டிக்கொள்வதைத் தடுக்க வடிவமைக்கப்பட்ட மருந்து. இது உடலை நோயில் இருந்து பாதுகாக்கிறது.**



**பின்வரும் நிலைகளில் 12 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கோவிட்-19 ஐத் தடுக்க ப்ரீ-எக்ஸ்போஷர் புரோஃபைலாக்சிஸுக்குத் தகுதி பெறலாம்:**

- குறைந்தது 88 பவுண்டுகள் (40 கிலோ) எடை.
- தற்போது கோவிட்-19 ஆல் பாதிக்கப்படவில்லை.
- மிதமானது முதல் தீவிரமான நோயெதிர்ப்புத் திறன் குறைபாடுள்ளவர்கள்.
- உங்கள் சுகாதார வழங்குநரால் கோவிட் - 19 தடுப்பூசி பெற பரிந்துரைக்கப்படாதவர்கள்.

### நான் சமீபத்தில் கோவிட்-19 தடுப்பூசி பெற்றிருந்தால், கோவிட்-19 க்கான ப்ரீ-எக்ஸ்போஷர் புரோஃபைலாக்சிஸ் ஐப் பெற முடியுமா?

ஒரு கோவிட்-19 தடுப்பூசிக்கான உங்கள் உடலின் நோயெதிர்ப்பு சக்தியை ப்ரீ-எக்ஸ்போஷர் புரோஃபைலாக்சிஸ் குறைக்கலாம். இந்த சிகிச்சையை நீங்கள் பெறுவதற்கு கோவிட்-19 தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்குப் பின்பு குறைந்தது 2 வாரங்கள் காத்திருக்க வேண்டும்.

### நான் இதை எப்படி எடுத்துக்கொள்வது?

நீங்கள் 2 தனித்தனியான இன்ட்ராமஸ்குலர் (தசைகளுக்குள் ஆழமாக செலுத்தப்படும் மருந்து) ஊசியைப் பெறுவீர்கள்.

### இதற்கு எவ்வளவு செலவாகும்?

இந்த மருந்து மத்திய அரசால் இலவசமாகத் தரப்படுகிறது. ஒவ்வொரு வழங்குநரும் ஒரு செலுத்துதல் கட்டணம் கேட்கலாம், அது நோயாளிக்கான கோபே உடன் உங்கள் காப்பீட்டு வழங்குநருக்கு அனுப்பப்படும்.

Washington State Department of Health

DOH 825-030 March 2022 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov ற்கு மின்னஞ்சல் செய்யவும்.